பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
01 10 2025 WEDNESDAY 12 40 PM
வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. நாட்டின் ஒற்றுமைக்கும், கலாச்சார பாதுகாப்பிற்கும் ஆர்.எஸ்.எஸ். அமைப்பு முக்கிய பங்காற்றி வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. ஆயுத பூஜை மற்றும் சரஸ்வதி பூஜையை முன்னிட்டு, மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

3. ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி விகிதம் ஆறு புள்ளி எட்டு சதவீதமாக அதிகரிக்கக்கூடும் என்று ரிசர்வ் வங்கி ஆளுநர் திரு. சஞ்சய் மல்ஹோத்ரா கூறியுள்ளார்.

4. நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் 98வது பிறந்த நாளை ஒட்டி, தலைவர்களும், ரசிகர்களும் அவருக்கு புகழஞ்சலி செலுத்தியுள்ளனர்.

5. 19 வயதுக்குட்பட்டோருக்கான கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில் ஆஸ்திரேலியாவுக்கு எதிராக, இந்தியா தனது முதல் இன்னிங்ஸில் 428 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

>>>>><<<<<

நாட்டின் ஒற்றுமைக்கும், கலாச்சார பாதுகாப்பிற்கும் ஆர்.எஸ்.எஸ். அமைப்பு முக்கிய பங்காற்றி வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரவித்துள்ளார்.

புதுதில்லியில் அந்த அமைப்பின் நூற்றாண்டு விழா கொண்டாட்டங்களில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர், ஆர்.எஸ்.எஸ். தொண்டர்கள் தேச நலனுக்கும், சமூக முன்னேற்றத்திற்கும் அயராது பணியாற்றி வருவதாக கூறினார்.

இந்நிகழ்ச்சியில், நாட்டிற்காக ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் பங்களிப்பை குறிக்கும் வகையில், தபால் தலையையும், நாணயத்தையும் பிரதமர் வெளியிட்டார்.

இவ்விழாவில் பேசிய மத்திய கலாச்சாரத்துறை அமைச்சர் திரு. கஜேந்திர சிங் ஷெகாவத், மக்களிடையே தேசப்பற்று மற்றும் கலாச்சார விழிப்புணர்வை ஆர்.எஸ்.எஸ். அமைப்பு ஏற்படுத்தியுள்ளதாக கூறினார்.

சமூக வளர்ச்சி, தேச சேவை, பாதுகாப்பு, சமூக நலன் உள்ளிட்ட பணிகளில் இந்த அமைப்பின் தொண்டர்கள் ஈடுபட்டு வருவதாக அமைச்சர் தெரிவித்தார்.

>>>>><<<<<

மகாநவமி பண்டிகையை ஒட்டி, பிரதமர் திரு. நரேந்திர மோடி மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

சமூகவலைதளத்தில் அவர் இன்று வெளியிட்டுள்ள பதிவில். நவராத்திரி விழா, அனைவரின் வாழ்விலும் வளம், வெற்றி, செழிப்பை கொண்டுவரட்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

ஆயுத பூஜை மற்றும் சரஸ்வதி பூஜையை முன்னிட்டு, மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

சமூகவலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், தேசத்தின் பரிமாணத்தை ஏற்றமிக்கதாய் எடுத்துச் செல்வதற்கு அடிப்படையான கல்வியிலும், தங்களது தொழில் மற்றும் பொருளாதார ஏற்றத்தை உருவாக்கும் உழைப்போர் வாழ்வில் அனைத்து நன்மைகளும் வந்து சேர வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் வளர்ச்சிக்கு அடிப்படையாய் விளங்கும் அனைவரையும் இந்நாளில் நினைவுகூர்ந்து வணங்குவதாக டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<

நாட்டின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி விகிதம் ஆறு புள்ளி எட்டு சதவீதமாக அதிகரிக்கக்கூடும் என்று ரிசர்வ் வங்கி ஆளுநர் திரு. சஞ்சய் மல்ஹோத்ரா தெரிவித்துள்ளார்.

நிதிக்கொள்கையை இன்று வெளியிட்டுப் பேசிய அவர், கடனுக்கான வட்டி விகிதத்தில் எந்தவித மாற்றமும் செய்யப்படவில்லை என்று கூறினார்.

ரிசர்வ் வங்கி பிற வங்கிகளுக்கு வழங்கும் கடனுக்கான வட்டி விகிதம் தொடர்ந்து ஐந்தரை சதவீதமாக இருக்கும் என்று அவர் குறிப்பிட்டார்.

நாட்டின் பணவீக்க விகிதம் நடப்பு நிதியாண்டில் இரண்டு புள்ளி ஆறு சதவீதமாக இருக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்தம் மூலம், இந்தியாவின் உலகளாவிய வர்த்தகத்திலும் மாற்றங்கள் ஏற்படலாம் என்றும் ரிசர்வ் வங்கி ஆளுநர் திரு. சஞ்சய் மல்ஹோத்ரா தெரிவித்தார்.

>>>>><<<<<

யுபிஐ பணப்பரிமாற்றம் சென்ற மாதத்தில் 21 சதவீதம் அதிகரித்து, 24 கோடியே 90 லட்சம் ரூபாய் பணப்பரிமாற்றம் நடைபெற்றதாக தேசிய பணப்பரிவர்த்தனைக் கழகம் கூறியுள்ளது.

இதனிடையே, தனிநபரிடமிருந்து வணிக நிறுவனங்களுக்கு செலுத்தும் யுபிஐ பணப்பரிவர்த்தனைக்கான உச்சவரம்பு நாளொன்றுக்கு 10 லட்சம் ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும், தனிநபர் இடையேயான யுபிஐ பணப்பரிவத்தனைக்கான உச்சவரம்பு தொடர்ந்து ஒரு லட்சம் ரூபாயாக இருக்கும் என்றும் கூறப்பட்டுள்ளது.

>>>>><<<<<

தேசிய மாணவர் படை தலைமை இயக்குநராக லெப்டினென்ட் ஜென்ரல் Virendra Vats இன்று பதவியேற்றார்.

மத்திய பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், 1988 இந்திய ராணுவத்தின் Kumaon பிரிவில் சேர்ந்த ஜென்ரல் Virendra Vats, வெலிங்டன் பாதுகாப்பு படை கல்லூரியில் Commandant-ஆகவும் பணியாற்றியுள்ளார்.

>>>>><<<<<

ஜம்முவிலிருந்து நாளை முதல் வரும் 8ஆம் தேதிவரை 16 ரயில்சேவைகள் மீண்டும் இயக்கப்படும் என்று வடக்கு ரயில்வே அறிவித்துள்ளது.

ஜம்முவில் மழை வெள்ளத்தால் ரயில் சேவைகள், கடந்த ஆகஸ்ட் மாதத்திலிருந்து பாதிக்கப்பட்டிருந்தது.

ஜம்முவிலிருந்து கான்பூர், Barauni, Guwahati, Gorakhpur உள்ளிட்ட பல்வேறு இடங்களுக்கான ரயில் சேவைகள் மீண்டும் தொடங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பண்டிகை காலத்தில் இந்த ரயில் சேவைகள் மீண்டும் தொடங்கப்பட்டதால் பயணிகள் பெரிதும் பயனடைவார்கள் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

>>>>><<<<<

நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் 98வது பிறந்த நாளை முன்னிட்டு, சென்னை அடையாறில் உள்ள அவரது மணிமண்டபத்தில் வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் இன்று மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

இதுதொடர்பாக, முதலமைச்சர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில். சிவாஜி கணேசன் தனது நடிப்பாற்றலால் உலகையே வியக்க வைத்து, வரலாறாக வாழ்ந்து, மக்களின் நெஞ்சங்களில் நிறைந்திருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

அவரது பிறந்தநாளான இன்று சிவாஜி கணேசனின் நினைவுகளை போற்றுவதாக திரு. மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இந்நாளை ஒட்டி, பல்வேறு தலைவர்களும், ரசிகர்களும் அவருக்கு புகழஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

>>>>><<<<<

அமெரிக்க அரசின் நிர்வாக செயல்பாடுகள், கடந்த 7 ஆண்டுகளில் முதல்முறையாக முடக்கப்பட்டுள்ளது.

நிதி செலவின மசோதா மீது அமெரிக்க நாடாளுமன்றத்தில் Republic மற்றும் Democrat கட்சிகளிடையே உடன்பாடு எட்டாத நிலையில், அரசு இந்த நடவடிக்கையை அதிகாரப்பூர்வமாக மேற்கொண்டுள்ளது.

பொது சுகாதாரத்துறையில் அரசு செலவினம் குறித்த பிரச்சினையில், இரு கட்சிகளுக்கு இடையே கருத்து வேறுபாடு நீடித்து வருகிறது.

இந்நிலையில், அமெரிக்க அரசின் பல்வேறு சேவைகள் முடக்கப்படுவதோடு, ஆயிரக்கணக்கான அரசு ஊழியர்களின் ஊதியமும் நிறுத்தி வைக்கப்படுகிறது.

இந்த நிலை தொடர்ந்தால், ஏராளமான அரசு ஊழியர்கள் பணியிழப்பு ஏற்பட வாய்ப்புள்ளதாக என்று அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் எச்சரித்துள்ளார்.

>>>>><<<<<

சீன நாட்டின் நிறுவன நாளை ஒட்டி, அந்நாட்டு மக்களுக்கு மத்திய வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

சமூகவலைதளத்தில் இன்று அவர் வெளியிட்டுள்ள பதிவில், சீன வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. Wang Yi-க்கு வாழ்த்து தெரிவிப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

மேலும், இந்தியா - சீனா இடையேயான இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவதற்கான முயற்சிகளில் இணைந்து செயல்பட வேண்டும் என்றும் அவர் அதில் தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<

ஆயுதபூஜை தமிழகம் முழுவதும் பக்தி சிரத்தையுடன் கொண்டாடப்பட்டு வருகிறது.

இதனையொட்டி, திருவாரூர் சரஸ்வதி அம்மன் கோவிலில் நடைபெற்ற சிறப்பு பூஜையில் பக்தர்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து வழிபட்டு வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் – விஜயகுமார் 34 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

தொடர் விடுமுறையை முன்னிட்டு, தமிழகத்தின் நீலகிரி மாவட்டத்திற்கு வரும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

இதையொட்டி, நெரிசலை தவிர்க்கும் வகையில், மேட்டுப்பாளையம் - உதகை மற்றும் கோத்தகிரி - மேட்டுப்பாளையம் சாலைகள் ஒருவழிப் பாதையாக மாற்றப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(சவுண்ட் பைட் – சரவணன் 54 செகண்ட்ஸ்)

>>>>><<<<<

*உத்தரபிரதேச மாநிலம், முஸாபர்நகர் மாவட்டத்தில் இன்று காலை நிகழ்ந்த சாலை விபத்தில் 6 பேர் உயிரிழந்தனர்.*

*பானிப்பட் நெடுஞ்சாலையில் காரும், டிரக்கும் மோதிய விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இவர்கள் உயிரிழந்ததாக காவல்துறை தெரிவித்துள்ளது.*

*இந்த விபத்தில் உயிரிழந்தோரின் குடும்பத்தினருக்கு முதலமைச்சர் திரு. யோகி ஆதித்யநாத் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துள்ளார்.*

*>>>>><<<<<*

*பிலிப்பைன்ஸில் நேற்றிரவு நிகழ்ந்த சக்தி வாய்ந்த நிலநடுக்கத்தில் உயரிழந்தோர் எண்ணிக்கை 69 ஆக அதிகரித்துள்ளது.*

*பிலிப்பைன்ஸின் மத்திய Visayas மாகாணத்தில் உள்ள Cebu நகரத்தில் ஏற்பட்ட நிலநடுக்கம் ரிக்டர் அளவில் 6 புள்ளி ஒன்பதாக பதிவானது.*

*>>>>><<<<<*

*பிரிஸ்பனில் நடைபெறும் 19 வயதுக்குட்பட்டோருக்கான கிரிக்கெட் டெஸ்ட் போட்டியின் இரண்டாவது நாளான இன்று, ஆஸ்திரேலியாவுக்கு எதிராக இந்தியா தனது முதல் இன்னிங்ஸில் 428 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.*

*முன்னதாக, ஆஸ்திரேலியா தனது முதல் இன்னிங்ஸில் 243 ரன் எடுத்தது.*

*>>>>>END<<<<<*